தை | January 2014

A quarterly newsletter from the Roja Muthiah Research Library
ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகத்தின் காலாண்டிதழ்

roja ital

ரோஜாஇதழ்

FREE CIRCULATION VOL.1 ISSUE 1

முத்தொள்ளாயிரம் : பாட வேறுபாடுகள்

01 முத்தொள்ளாயிரம் முதன்முதலில் 1905-ம் ஆண்டு ரா. இராகவையங்காரால் பதிப்பிக்கப்பட்டது.

ஒற்றுமையில் வேற்றுமை சிந்துவெளி ஆட்சிப்பரப்புகள்: ஒரு கண்ணோட்டம்

04 க்ரெகொரி பொஷல் சிந்துவெளிப் பகுதியை ஏழு ஆட்சிப் பரப்புகளாகப் பிரித்தார்.

ஐரோப்பாவில் தமிழ் ஆவணங்கள்

08 தஞ்சை அரசர் ரகுநாத நாயக்கர் தங்க ஓலையில் எழுதிக் கொடுத்த பட்டயமும் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளது.

# முத்தொள்ளாயிரம் : பாட வேறுபாடுகள்

**பெருமாள்முருகன், தமிழ் இணைப் பேராசிரியர், அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரி, நாமக்கல்**

பாட வேறுபாடு குழப்பம், விடுகை, சேர்க்கை என மூவகைப்படும் என்பர் எஃப். டபிள்யு. ஹால். (அ. விநாயகமூர்த்தி, மூலபாட ஆய்வியல், ப.29,30) அதில் சேர்க்கையின் மூலமாக எவ்வாறு பாட வேறுபாடு உருவாகும் என்பதைப் பற்றிக் கீழ்வருமாறு குறிப்பிடுகின்றார்.

1. ஒரு சொல்லையோ தொடரையோ இருமுறை எழுதிவிடுதல்.
2. மூலத்தின்வரிகளுக்கிடையிலோ வரம்புப்பகுதியிலோ முன் ஏட்டினர் தம்நினைவுக்காக எழுதி வைத்தவற்றை மூலத்தின் பகுதி என்று பின் வந்தோர் எண்ணிப் பிரதி செய்துவிடுதல்.
3. சொற்களையோ வரிகளையோ பாடல்களையோ தாமே இயற்றி இடையில் சேர்த்துப் பெருக்குதல்.
4. பிற நூல்களிலிருந்து பாடல் முதலானவற்றை எடுத்துச் சேர்த்தல்.

இந்நால்வகையிலும் பாடம் பெருகுவதை 'பெருக்கம்' என்று குறிப்பிடுவர். இவை அனைத்திற்கும் தமிழ் மரபிலக்கியங்களில் இருந்து சான்றுகள் காட்ட இயலும். இறுதியாக அவர் கூறும் 'பிற நூல்களிலிருந்து பாடல் முதலானவற்றை எடுத்துச் சேர்த்தல்' என்னும் வகைக்கு அச்சு நூல்களில் இருந்தே சான்று கூறலாம்.

முத்தொள்ளாயிரம் முதன்முதலில் 1905-ம் ஆண்டு ரா. இராகவையங்காரால் பதிப்பிக்கப்பட்டுச் செந்தமிழ்ப் பிரசுர வெளியீடாக வந்தது. அதில் கடவுள் வாழ்த்து உட்பட 108 பாடல்கள் இடம் பெற்றிருந்தன. பின்னர் 1938-ல் ச. வையாபுரிப்பிள்ளை 'புறத்திரட்டு' நூலைப் பதிப்பித்தார். அதில் முத்தொள்ளாயிரப் பாடல்களாகக் கடவுள் வாழ்த்து உட்பட 109 பாடல்கள் இடம்பெற்றிருந்தன. அவற்றுள் ஒருபாடல் சிதைந்து காணப்பட்டது என்று கூறி அச்சிதைந்த வடிவத்தையும் வையாபுரிப்பிள்ளை கொடுத்துள்ளார். சிதைந்த பாடல் மட்டும் ரா. இராகவையங்கார் பதிப்பில் இடம்பெறவில்லை. மற்றபடி 108 பாடல்கள் இரு பதிப்புகளுக்கும் பொதுவாக அமைந்துள்ளன. முத்தொள்ளாயிரத்தை ஓலைச்சுவடியில் இருந்து எடுத்துப் பதிப்பித்தவை இவ்விரு பதிப்புகளே.

அதன்பின் முத்தொள்ளாயிரத்திற்கு உரை எழுதிப் பலர் அவ்வப்போது வெளியிட்டுள்ளனர். முத்தொள்ளாயிரத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்ட டி. கே. சி. 1943-ல் முத்தொள்ளாயிரப் பாடல்களுக்கு ரசனை விளக்கம் எழுதி வெளியிட்டார். அது வையாபுரிப்பிள்ளையின் பதிப்பையே ஆதாரமாகக் கொண்டதாகும். ஆகவே சிதைந்த பாடல் ஒன்றை விட்டுவிட்டு 108 பாடல்களைத் தம் நூலில் கொண்டுள்ளார். பின்னர் ரெ. முத்துகணேசன், செ. உலகநாதன் ஆகியோர் உரைகள் நூல்களாக வெளியாகி உள்ளன. பாட நூல் நோக்கில் உள்ள இந்நூல்களிலும் 109 பாடல்கள் உள்ளன. இவர்களும் வையாபுரிப்பிள்ளையின் புறத்திரட்டு பதிப்பையே ஆதாரமாகக் கொண்டுள்ளனர். சிதைந்த ஒரு பாடலுக்கும் ஒப்பேற்றிப் பொருள் கூறியுள்ளனர்.

1946-ல் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் சேதுரகுநாதன் உரையோடு முத்தொள்ளாயிரத்தை வெளியிட்டுள்ளது. இந்நூலில் 130 பாடல்கள் கொடுக்கப்பட்டுள்ளன. புறத்திரட்டு பதிப்பில் உள்ள சிதைந்த பாடல் இதில் இடம்பெறவில்லை. ஆகவே புறத்திரட்டு பதிப்பில் இல்லாத 22 பாடல்கள் இந்நூலில் சேர்க்கப்பட்டுள்ளன. அதற்கான காரணம் பற்றி முன்னுரை இவ்வாறு குறிப்பிடுகின்றது:

'பழைய உரைகளினிடையே பயின்று கிடந்தனவாய இருபத்திரண்டு பாடல்கள் இவற்றோடு ஒத்து இயல்பினவாய்க் காணப்பட்டமையின் அவையும் இவற்றோடு சேர்த்து உரை எழுதி வெளியிடப் பெறுவனவாயின.' (ப.6)

வையாபுரிப்பிள்ளை தாம் எழுதிய புறத்திரட்டு முன்னுரையில் இளம்பூரணர் உரையால் தெரியவரும்

பாடல் ஒன்றை எடுத்துக்காட்டுகின்றார். (புறத்திரட்டு, ப.xlviii) அப்பாடல்:

ஏற்றூர்தி யானும் இகல்வெம்போர் வானவனும்
ஆற்றலும் ஆள்வினையும் ஒத்தொன்றின் ஒவ்வாரே
கூற்றக் கணிச்சியான் கண்மூன்று இரண்டேயாம்
ஆற்றல்சால் வானவன் கண்.

இப்பாடல் தொல்காப்பியப் பொருளதிகாரம் புறத்திணையியல் ஐந்தாம் நூற்பாவில் பூவை நிலை என்னும் துறைக்குச் சான்றாக இளம்பூரணர் காட்டுவதாகும். 'என முத்தொள்ளாயிரத்து வந்தவாறு காண்க' என்று நூற்பெயரைக் குறிப்பிட்டு இளம்பூரணர் இப்பாடலை எடுத்துக்காட்டுகின்றார். ஆகவே இது முத்தொள்ளாயிரப் பாடல் என்பது வெளிப்படை.

'முத்தொள்ளாயிரம்' என்னும் கட்டுரையில் தொல்காப்பியச் செய்யுளியலுக்குப் பேராசிரியர் எழுதிய உரையில் (நூற்பா 158) 'பன்மாடக் கூடல்' எனத் தொடங்கும் ஆறடி வெண்பா ஒன்றையும் எடுத்துக்காட்டி (ப.303,304) இதுவும் முத்தொள்ளாயிரப் பாடலாக இருக்கலாம் என்று கருத்துக் கூறுகின்றார். 'பதினெண் கீழ்க்கணக்கினுள்ளும் முத்தொள்ளாயிரத்துள்ளும் ஆறடியினேறாமற் செய்யுள் செய்தார் பிற்சான்றோரு மெனக் கொள்க' என்றெழுதும் பேராசிரியர் இங்ஙனம் வந்தமைக்குச் சான்று காட்டும்போது நூற்பெயர் குறிப்பிடாமல் இவ்வெண்பாவைத் தருகிறார். உரையில் 'முத்தொள்ளாயிரத்துள்ளும்' என்று வருவதால் இப்பாடல் அந்நூலைச் சேர்ந்ததாக இருக்கலாம் என்பது வையாபுரிப்பிள்ளையின் கருத்து.

புறத்திரட்டில் இல்லாத இரண்டு பாடல்களை முத்தொள்ளாயிரப் பாடல்களாக இருக்கலாம் என அவர் ஊகம் செய்கிறார். அவ்வாறு ஊகிப்பதற்கான காரணத்தையும் விரிவாக எழுதியுள்ளார். ஆனால் கழகப் பதிப்பில் 22 பாடல்கள் அவ்வாறு சேர்க்கப்பட்டுள்ளன. சேர்க்கப்பட்ட பாடல்கள் என்பதைக் குறிக்க உடுக்குறியிட்டுக் காட்டப்பட்டுள்ளது. ஆனால் அவை எங்கிருந்து எடுக்கப்பட்டன என்பது பற்றிய குறிப்புகள் மூன்று பாடல்களுக்கு மட்டுமே உள்ளன. தொல்காப்பியம் நச்சினார்க்கினியர் உரையிலிருந்து ஒரு பாடல், யாப்பருங்கலக் காரிகை உரையிலிருந்து இரண்டு பாடல்கள் என்னும் குறிப்பைத் தவிர பிற பத்தொன்பது பாடல்களுக்கும் அடிக்குறிப்பில் 'முத்தொள்ளாயிரம் என்று கருதத்தக்கது' என்று மட்டும் கொடுக்கப்பட்டுள்ளது. அப்பாடல்களின் மூலம் பற்றி அறிய வேண்டுமானால் தமிழ் இலக்கியப் பரப்பு முழுவதையும் நாமே தேடிக் கண்டடைய வேண்டும். இதே நூல் பின்னர் வெளியிடப்படும் போது உடுக்குறி நீக்கப்பட்டு விட்டால் 22 பாடல்களும் முத்தொள்ளாயிரப் பாடல்களே என்றாகிவிடும். அவை முத்தொள்ளாயிரப் பாடல்கள் என்பதற்குரிய தெளிவான சான்றுகள் கிடைத்தால் ஒழிய அவற்றை ஏற்றுக்கொள்ள இயலாது. நூலுக்குள் கொண்டு வராமல் பின்னிணைப்பாகக் கொடுத்து அப்பாடல்கள் வரும் இடத்தையும் தெளிவாகக் காட்டியிருந்தால் ஆய்வு செய்வோருக்கு உதவும். காரணம் கூறப்படாமல் 22 பாடல்களை நூலுக்குள் சேர்த்திருக்கும் செயல் பதிப்பு அறமல்ல.

மற்றபடி முத்தொள்ளாயிரத்தின் 109 பாடல்களில் பாட வேறுபாடுகள் மிகுதியாகக் காணப்படவில்லை. எழுதுவோர் பிழையால் நேர்ந்த பாடங்களே பெரும்பான்மையான பாட வேறுபாடுகளாக வையாபுரிப்பிள்ளையால் கொடுக்கப்பட்டுள்ளன. அவையல்லாத ஒரு சில முக்கியமான பாட வேறுபாடுகளும் உள்ளன. அவற்றில் இரண்டைக் காணலாம்.

செங்கால் மடநாராய் தென்னுறந்தை சேறியேல்
நின்கால்மேல் வைப்பனென் கையிரண்டும் - **நன்பால்**
கரையுரிஞ்சி மீன்பிறழும் காவிரிநீர் நாடற்கு
உரையாயோ யானுற்ற நோய். (புறத்திரட்டு, 1539)

இப்பாடலுக்குப் பதிப்பாசிரியர்களாகிய இராகவையங்காரும் வையாபுரிப்பிள்ளையும் பாட வேறுபாடு எதுவும் காட்டவில்லை. அவர்கள் பதிப்புப்படி இது பாட வேறுபாடு இல்லாப் பாடலாகும். இவ்வெண்பாவில் தனிச்சொல்லாக வரும் 'நன்பால்' என்பதை டிகேசி 'வன்பால்' எனத் திருத்தம் செய்துள்ளார். 'தேகத்தின் வலிமை காரணமாகக் கரையின்மேல் உராய்ந்து உராய்ந்து ஏறிய மீன்' (ப.57) என அவர் பொருள் தருகிறார். சிறந்த பொருள் எனத் தான் கருதுவதை வரவழைக்க இவ்வாறு திருத்தம் செய்துகொள்வது டிகேசியின் இயல்பு. ஆனால் இதை ஏற்றுக்கொள்ள இயலாது.

முத்துக்கணேசன் நன்பால் என்பதைக் காவிரி நீர்நாடனொடு இயைத்து 'நல்லொழுக்கம் கொண்டவன்' எனப் பொருள் காண்கிறார். செ. உலகநாதன் 'நல்ல இடம்' எனப் பொருள் கொள்கிறார். 'நல்ல பால்' என்றும் பொருள் கொள்ள இடம் இருப்பதாய் அவர் கருதுகிறார். பொருள் கொள்வதிலும் சொற்களை முன்பின் இயைப்பதிலும் பிரச்சினை இல்லை. அவ்வாறு கூடுதல் பொருள் எடுத்துக்கொள்ள இயலும் எனின் அது அப்பாடலுக்கு மேலும் சிறப்பையே சேர்க்கும். ஆனால் டிகேசி செய்தது போலத் திருத்தம் செய்வது ஏற்றுக்கொள்ளத் தக்கதல்ல. 'நன்பால்' என இருப்பதே சரி.

இப்பாடலில் 'கரையுரிஞ்சி' எனப் பதிப்பாசிரியர்கள் கொடுத்துள்ளனர். இதனை முத்துக்கணேசனும் உலகநாதனும்'கரையுறிஞ்சி' எனப்பாடம் கொண்டுள்ளனர். இவ்வகைப் பாடம் கொடுக்கப்படவில்லை எனினும் இவ்வுரையாசிரியர்கள் தாங்களாகவே திருத்திக் கொண்ட பாடம் இது. 'உரிஞ்சி' எனின் 'உராய்தல்' எனப் பொருள். 'உறிஞ்சி' என்று கொண்டால் 'உறிஞ்சுதல்' என்றாகும். 'நல்ல பாலைக் காவிரிக் கரையில் உறிஞ்சி' என்பதும் 'மீன்கள் காற்றை உறிஞ்சிய பிறகு நீரினுள் துள்ளும்' (36) என்பதும் உலகநாதன் விளக்கம். 'உராய்தல்' என்றே முத்துக்கணேசன் பொருள் தருகிறார். ஒரே ஒரு எழுத்து எனினும் சொல்லும் பொருளும் மாறிவிடுகின்றன. ஆகவே இவ்விதம் மாற்றுதல் முறையல்ல. இப்பாடலைப் பொருத்தவரை பாட வேறுபாடு எதுவுமில்லை. உரையாசிரியர்கள் தம் எண்ணப்படி திருத்தம் செய்தவற்றைப் பாடமாகக் கருதக்கூடாது.

முத்தொள்ளாயிரப் பாடல்களிலேயே குறிப்பிடத்தக்கதும் முக்கியமானதுமான பாட வேறுபாடுகளைக் கொண்டதுமான பாடல் இது:

நீணீலத் தார்வளவன் நின்மேலான் ஆகவும்
நாணின்மை இன்றி நடத்தியால் - நீணீலம்
கண்டன்ன கொண்டல் வரும்கா விரிநாட்டுப்
பெண்டன்மை இல்லை பிடி. (புறத்திரட்டு, 1512)

முதல் சீர் 'நீணீலம்' என்று உள்ளது. அனைவரும் இப்பாடத்தையே மேற்கொண்டுள்ளனர். இதற்குப் பாட வேறுபாடாக 'நீணிலம்' என்பதை வையாபுரிப் பிள்ளை கொடுத்துள்ளார். 'நீள் நீலத் தார் அணிந்த வளவன்' எனப் பொருள் கொள்வது பொருத்தமில்லை. சோழனுக்குப் பல இடங்களில் 'தார்' குறிப்பிடப்படுகின்றது. ஆனால் எங்கும் குறிப்பிட்ட மலரால் தொடுக்கப்பட்ட தார் என்று வரவில்லை. 'நீல மலர்களால் கட்டப்பட்ட தார்' என்று பொருள் கொள்வது முத்தொள்ளாயிரப் பாடல்களின் பொருளமைதிக்கு ஏற்புடையதல்ல. 'நீணிலத் தார் வளவன்' என்னும் பாடத்தைக் கொண்டால் 'பெருநிலமாகிய உலகத்தை ஆள்பவனும் மாலை அணிந்தவனுமாகிய வளவன்' எனப் பொருள்படும். இது பொருள் பொருத்தம் உடையது மட்டுமல்ல, எதுகைக்கும் பொருந்துவதாகும். மேலும் தனிச்சொல் 'நீணீலம்' எனவே வருகிறது. அங்கு வளத்தைக் குறிக்கவும் பொருத்தமான உவமையோடும் நீலமலர் இடம்பெறுகிறது. அவ்வாறிருக்கப் பாடலின் தொடக்கத்தில் எச்சிறப்பும் இன்றி வெறுமனே இம்மலர் இடம்பெறுவதைத் தவிர்த்ததாகவும் ஆகும்.

அடுத்த அடியில் 'நாணின்மை' என்னும் பாடத்தைப் பதிப்பாசிரியர்கள் கொண்டுள்ளனர். பாட வேறுபாடாக 'நாணிமை' என்பதை வையாபுரிப்பிள்ளை கொடுத்துள்ளார். இரண்டாம் அடியை 'நாணாதே என்றும்' என டிகேசி திருத்தம் செய்துள்ளார். அதே போல 'நாணீர்மை' எனச் செ. உலகநாதன் திருத்திப் பாடம் கொண்டுள்ளார். இவை உரையாசிரியர்கள் செய்த திருத்தம் என்பதால் இவற்றைப் பாட வேறுபாடாகக் கணக்கில் கொள்ளத் தேவையில்லை.

'நாணின்மை இன்றி நடத்தியால்' எனப் பாடம் கொண்டால் பொருள் குழப்பம் உருவாகும். நாணின்மை என்பதற்குச் சேதுரகுநாதன் நாணினது தன்மை எனப் பொருள் தருகிறார். அவ்வாறு கொள்வது பொருந்தாது. நாணின்மை என்பதை நாண் + இன்மை என்றுதான் பிரிக்க இயலும். எனில் அதற்கு நாணம் இல்லாமை என்று பொருளாகும். அதன் பின் மீண்டும் 'இன்றி' என்பது வருகிறது. 'நாணின்மை இன்றி' என்றால் நாணத்தோடு என உடன்பாட்டுப் பொருள் ஆகிவிடும். யானையைப் பார்த்து 'நீ நாணம் இல்லாமல் நடக்கின்றாய்' எனத் தலைவி கூறுவதுதான் பாடல் பொருள். 'நாணின்மை இன்றி' என்பதில் இவ்விதம் குழப்பம் வருவதால்தான் உரையாசிரியர்கள் திருத்தம் செய்து இயைபுடைய பொருள் கொள்ள முயன்றுள்ளனர்.

வையாபுரிப்பிள்ளை கொடுத்துள்ள பாட வேறுபாடாகிய 'நாணிமை' என்பதைப் பாடமாகக் கொண்டுள்ளவர் ரெ.முத்துக்கணேசன். நாணிமை - நாண் + இமை எனப் பிரித்து 'நாணத்தில் ஒரு சிறிதளவுகூட' எனப் பொருள் காண்கிறார். நாணிமை இன்றி நடத்தியால் என்று பாடம் கொள்வது பொருள் பொருத்தம் தோன்றுவதாக உள்ளது. மேலும் 'நீணிலம்' என்பதற்கு ஏற்ற எதுகை கொண்டதாகவும் பொருந்துகிறது.

மூன்றாம் அடி முழுமைக்கும் பாட வேறுபாடு உள்ளது. 'நீணீலங் கண்டன்ன கொண்டல் வரும்கா விரிநாட்டு' என்பதற்கு 'நீணீலங் கண்டன்மை கொண்டலரும் காவிரிநீர் நாட்டு' என்பதைப் பாட வேறுபாடாக வையாபுரிப்பிள்ளை கொடுத்துள்ளார். இவ்வேறுபாட்டையே பாடமாகக் கொள்ளும் டிகேசி இப்பாடமே சிறந்தது என விதந்து குறிப்பிட்டுள்ளார். செ. உலகநாதனும் இப்பாடத்தையே மேற்கொண்டுள்ளார். ஆனால் பிறர் 'நீணீலம் கண்டன்ன கொண்டல் வரும் காவிரி நாட்டு' என்பதையே மூலபாடமாக எடுத்துள்ளனர். 'நீலமலர்கள் சேர்ந்தது போல மேகம் வரும் காவிரி நாடு' என இதற்குப் பொருள் எழுதுகின்றனர்.

சேது ரகுநாதன் இதன் பொருளை இயைக்கும் விதம் சுவையானது. 'தடாகத்தில் மலர்ந்திருக்கின்ற நீல மலரின் பரப்பினைக் கண்டாற் போன்ற தோற்றமுள்ள கார்மேகங்கள் தவழும் பொழில் சூழ்ந்த இந்தக் காவிரி நாட்டுப் பெண்தன்மை' (ப.148) என்று பெண் தன்மையோடு இயைக்கும் அவர் 'காவிரி நாட்டுப் பெண் தன்மையினாலேயே மழை வளம் மிகுகின்றது' என மழையையும் கற்பையும் இணைத்துக் காணும் மரபுப் பார்வையை உரையில் முன்வைக்கின்றார். ஆனால் 'நீணீலம் கண்டன்மை கொண்டலரும் காவிரிநீர் நாட்டு' என்னும் பாடமே பொருத்தம் உடையது என எடுக்கும் டிகேசி நீலமலர் கண் போலத் தோன்றும்' என உவமையைப் பொருத்துகிறார். இது மரபான உவமை. நிறமும் வடிவமும் பொருந்துகின்றன. மேகத்திற்கு நீல மலரை உவமிப்பது பொருத்தமல்ல.

மேலும் 'காவிரி நீர் நாட்டு' என்னும் பாடம் முத்தொள்ளாயிரப் பாடல்களின் அமைதிக்கு உட்பட்டும் அமைகின்றது. பல இடங்களில் 'நீர் நாடு' என்னும் ஆட்சி பயன்படுத்தப்பட்டுள்ளது. 'கரையுரிஞ்சி மீன்பிறழும் காவிரி நீர்நாடன்' (1539), 'பாளையில் தேன்தொடுக்கும் பாய்புனல் நீர்நாட்டு' (1552),'வாளுழவை வெல்கொடியான் வண்புனல் நீர்நாடன்' (1555) என வருபவை சான்றுகள். ஆகவே மேற்கண்ட கருத்துக்களின் அடிப்படையில் இப்பாடல் கீழ்வருமாறு அமையலாம்:

நீணிலத் தார்வளவன் நின்மேலான் ஆகவும்
நாணிமை இன்றி நடத்தியால் - நீணீலம்
கண்டன்மை கொண்டலரும் காவிரி நீர்நாட்டுப்
பெண்டன்மை இல்லை பிடி.

------------------


பயன்பட்ட நூல்கள்:
மூலம்:
1. முத்தொள்ளாயிரச் செய்யுட்கள், சேது ஸம்ஸ்தான வித்துவான் ரா.இராகவையங்காரால் பரிசோதிக்கப்பட்டன, 1935, செந்தமிழ்ப் பிரசுரம் 14, இரண்டாம் பதிப்பு.
2. புறத்திரட்டு, எஸ்.வையாபுரிப்பிள்ளை (ப.ஆ.), 2001, சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை, மறுபதிப்பு.
உரைகள்:
1. டி.கே.சி., முத்தொள்ளாயிரம், 2004, சென்னை, பாரிநிலையம், மறுபதிப்பு.
2. ந.சேதுரகுநாதன் , முத்தொள்ளாயிரம், 1964, சென்னை, கழகம், மறுபதிப்பு.
3. ரெ.முத்துக்கணேசன், முத்தொள்ளாயிரம், 1957, சென்னை, பாரிநிலையம்.
4. செ.உலகநாதன், முத்தொள்ளாயிரம், 2001, சென்னை, முல்லை நிலையம்.
கட்டுரை நூல்கள்:
1.எஸ்.வையாபுரிப்பிள்ளை, இலக்கியச் சிந்தனைகள் முதல் தொகுதி, 1989, சென்னை, வையாபுரிப்பிள்ளை நினைவு மன்றம்.
2.அ.விநாயக மூர்த்தி, மூலபாட ஆய்வியல், 1978, மதுரை, பாலமுருகன் பதிப்பகம்.■

# ஒற்றுமையில் வேற்றுமை - சிந்துவெளி ஆட்சிப்பரப்புகள்: ஒரு கண்ணோட்டம்

**ச. சுப்பிரமணியன், ஆராய்ச்சியாளர், சிந்துவெளி ஆராய்ச்சி மையம், ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகம்**

மொஹெஞ்ஜோதாரோ மற்றும் ஹரப்பாவில் நடந்த அகழ்வாராய்ச்சிகளின் மூலம் சிந்துவெளி நாகரிகத்தின் பெருமையும் தொன்மையும் உலகுக்குத் தெரிய வந்தது. இதைத் தொடர்ந்து இப்பகுதியில் மேலும் பல இடங்களில் நடந்த அகழ்வாய்வுகளின் மூலம் இந்நாகரிகத்தின் பரப்பை அறிய முடிந்தது. அகழ்வாய்வுகளில் கிடைத்த பொருட்களைக்கொண்டும், நகரங்களின் வடிவமைப்பு மற்றும் கட்டடப் பொருட்களைக் கொண்டும், அறிஞர்கள் சிந்துவெளி நாகரிகம் ஒருபடித்தான (homogeneous), ஓரின மக்களைக் கொண்ட நாகரிகம் என்றும், அம்மக்கள் ஒரே மொழியை, பேசவும் எழுதவும் பயன்படுத்தினார்கள் என்றும், அவர்கள் அனைவரும் ஒரே பண்பாட்டை/மரபைப் பின்பற்றினார்கள் என்ற கருத்துக்களை முன் வைத்தார்கள். மார்டிமர் வீலர் இதை “வியத்தகு ஒரேபடித்தான நிலை” என்று குறிப்பிடுகிறார். இக்கருத்துக்களினால், சிந்து வெளிப்பகுதி இன்றைய ஈரான் முதல் இந்தியா வரை, ஆப்கானிய வட எல்லை முதல் அரபிக்கடல் வரை பரவி இருந்ததென்றும், மொஹெஞ்ஜோதாரோ மற்றும் ஹரப்பாவைத் தலைநகர்களாகக் கொண்டு மதகுரு-அரசர்களால் ஆளப்பட்டு வந்தது என்றும், இப்பண்பாட்டு மக்கள் ஒரே மொழி மற்றும் பண்பாட்டைப் பின்பற்றி வாழ்ந்தனர் என்றும் எல்லோராலும் நம்பப்பட்டது.

அவ்வாறு இருக்க பிரிவினைக்குப் (partition) பின் நடந்த பல்வேறு அகழ்வாராய்ச்சிகளின் மூலம் பல புதிய தகவல்கள் தெரிய வந்துள்ளன. எடுத்துக்காட்டாக, மெஹர்கர் நகரம் அகழ்ந்தெடுக்கப்பட்டதின் மூலம், அதன் தொன்மை குறித்தும், சிந்துவெளிப் பகுதியில் வேளாண்மையின் தோற்றம் குறித்தும் நாம் அறிகிறோம். இது பலூசிஸ்தான் பகுதியில் குல்லி பண்பாடாகப் பரிணமித்து பின்னர் முதிர் ஹரப்ப காலகட்டத்தில் (கி. மு. 2500-1900) சிந்துவெளி நாகரிகத்தை ஒரு நகர நாகரிகமாக உருவாக்கியது. எனினும், குல்லி பண்பாடு ஒரு நகர நாகரிகமாகப் பரிணமிக்கவில்லை என்பதும், அங்கு முதிர்ந்த ஹரப்ப காலத் தடயங்கள் ஏதும் இதுவரைக் கிடைக்கப்பெறவில்லை என்பதும் வியத்தகு செய்தியாகும்.

இது போன்றே, 1970 களில் குஜராத்தின் சௌராஷ்டிரா பகுதியில் நடந்த அகழ்வாராய்ச்சிகளின் மூலம் அங்கு ரோஜ்தி என்ற சிந்துவெளிக் குடியிருப்பு அகழ்ந்தெடுக்கப்பட்டது. இந்நகரம் முதிர் ஹரப்ப காலகட்டத்தில் உருவான போதிலும், அமைப்பிலும், அங்கு கிடைத்த பொருட்களின் மூலமும், இது மற்ற முதிர் ஹரப்ப காலகட்ட நகரங்களிலிருந்தும் வேறுபட்டது எனத் தெரியவந்தது. விரைவில் ரோஜ்தி போன்றே அமைப்பில் உள்ள மற்றும் பல குடியிருப்புகள் சௌராஷ்டிரா பகுதியில் அகழ்ந்தெடுக்கப்பட்டன. இப்பகுதியின் தனித்தன்மை காரணமாக க்ரெகொரி பொஷல் இதை சோரத் ஆட்சிப் பரப்பு (Sorath Domain) என்று அழைத்தார். இப்பகுதி சோரத் ஹரப்பப் பகுதி என்றும் அழைக்கப்படுகிறது (சௌராஷ்டிரா பண்டைய காலத்தில் சோரத் என அழைக்கப்பட்டது). சிந்துவெளியின் வட்டார வேறுபாடுகளை முதலில் சுட்டிக் காட்டியவர் ஜகத்பதி ஜோஷி. இவரைத் தொடர்ந்து க்ரெகொரி பொஷல் சிந்துவெளிப் பகுதியை ஏழு ஆட்சிப் பரப்புகளாகப் பிரித்தார் (படம் 1). மொஹெஞ்ஜோதாரோ சிந்திப் பகுதியிலும் ஹரப்பா, ஹரப்பப் பகுதியிலும் கன்வேரிவாலா சோலிஸ்தானிலும் உள்ளன.




படம் 1. சிந்துவெளி ஆட்சிப் பரப்புகள் (நன்றி: க்ரெகொரி பொஷல்)

சோரத் ஹரப்ப குடியிருப்புகள் சிந்தி குடியிருப்புகளைக் காட்டிலும் பரப்பளவில் சிறியவை. இங்கு கிடைத்துள்ள பொருட்களும் வேறுபட்டவை. எடுத்துக்காட்டாக, மெருகூட்டப்பட்ட சிவப்பு பாண்டம் (lustrous red ware) சிந்தி ஹரப்பப் பகுதியில் பெருமளவில் கிடைத்துள்ளது, ஆனால் சோரத் ஹரப்பப் பகுதியில் இது கிடைக்கவில்லை. இது போன்றே, மொஹெஞ்ஜோதாரோ மற்றும் ஹரப்பாவில் பெருமளவில் கிடைத்துள்ள பிடியில்லாக் கோப்பை (goblet), S-வடிவ குடுவை மற்றும் சரிந்த அடிப்பகுதியுடைய பெரும் பானைகளும் சோரத் ஹரப்பப் பகுதியில் கிடைக்கப்பெறவில்லை. சோரத் ஹரப்பப் பாண்டங்களில் குறிப்பிடத்தக்கது அரைக்கோள செம்பூச்சு மட்பாண்டக் கிண்ணமாகும் (hemispherical red ware bowl). இவை

கைப்பிடி குமிழ்களுடன் மிகவும் நேர்த்தியாக வடிவமைக்கப்பட்டவை.

சிந்து எழுத்துக்கள் கொண்ட இலச்சினைகள் மற்றும் முத்திரைகள் மிகச்சிலவே சோரத் ஹரப்பப் பகுதியில் கிடைத்துள்ளன. இப்படிக் கிடைத்த இலச்சினைகள் மற்றும் முத்திரைகளிலும் ஓரிரு எழுத்துக்களே காணப்படுகின்றன. கிறுக்கிய சிந்துவெளி எழுத்துக்கள் உள்ள பானையோடுகள் இப்பகுதியில் அதிக அளவில் கிடைத்துள்ளன. லோதல் மற்றும் தோலவிராவில் (தபால் தலை) முத்திரைகளும் பல குறியீடுகள் கொண்ட எழுத்து வடிவங்களும் கிடைத்துள்ளன. அவை சோரத் ஹரப்பப் பகுதியில் அமைந்திருந்தாலும், பண்பாட்டில் சிந்தி ஹரப்ப நகரங்களாகவே கருதப்படுகின்றன.

சோரத் ஹரப்ப நகர அமைப்பும், அங்கு பயன்பட்ட தொழில் நுட்பமும், சிந்தி ஹரப்ப நகரங்களில் இருந்து மாறுபட்டவை. சோரத் ஹரப்ப நகரங்களில் செங்கற்களின் பயன்பாடு இல்லை. இங்கு சுவர்கள் கற்களில் மண் பூசிக்கட்டப்பட்டவை. இது போன்றே, சிந்தி ஹரப்ப நகரமான மொஹெஞ்ஜோதாரோவில் காணப்படும் கிணறுகள், குளிக்கும் அறைகள், சீராக அமைக்கப்பட்ட கழிவு நீர்க்கால்வாய்கள் போன்ற அமைப்புகள் ரோஜ்தி போன்ற சோரத் ஹரப்ப நகரங்களில் காணப்படுவதில்லை.

மேலும், மொஹெஞ்ஜோதாரோ மற்றும் ஹரப்பா நகரங்களில் தொழிற்சாலைகளும், உற்பத்தி மையங்களும் எராளமான அளவில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. முதிர் ஹரப்ப காலத்தில் சிந்துவெளிப்பகுதி அதி வெப்ப தொழில்நுட்பத்தில் (pyro technology) பொருட்கள் செய்யும் பெரும் மையமாக இருந்தது. ஆனால் இத்தகைய தொழிற்சாலைகளோ, உற்பத்தி மையங்களோ ரோஜ்தி போன்ற சோரத் ஹரப்ப நகரங்களில் கிடைக்கப்பெறவில்லை. ரோஜ்தியில் வேளாண் மக்களும் கால்நடை மேய்ப்போரும் அதிக அளவில் வசித்ததற்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளன. இதன் மூலம், இப்பகுதி வேளாண் மற்றும் கால்நடைப் பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்டது என அறிய முடிகிறது.

இவ்வாதாரங்களை அடிபடையாகக் கொண்டு சிந்து வெளி ஆராய்ச்சியாளர்கள் ஒரு புதிய கோட்பாட்டை முன் வைத்தனர். முதிர் ஹரப்ப காலத்திற்கு முன்பு சிந்துவெளி ஆட்சிப்பகுதிகள் மாறுபட்ட தனிப்பண்பாடுகளாக இருந்ததாகவும். இவை நாம் ஹரப்ப நாகரிகத்தின் கூறுகளாகக் கருதும் பண்புகளான, எடை மற்றும் அளவைகள், சுட்ட செங்கற்களாலான பெருங் கட்டடங்கள், சூதுபவள ஆபரணங்கள், கழிவு நீர் கால்வாய் மற்றும் குளியலறை அமைப்புகள் போன்றவற்றை, முதிர் ஹரப்ப காலத்தில் ஏற்றுக்கொண்டதாகவும், ஆயினும், சிந்துவெளிப் பண்பாடு வீழ்ச்சி அடைந்த பின், அவை முன்னிருந்த, தத்தம் தனிப்பண்பாட்டு வழிகளுக்குத் திரும்பியதாகவும் கூறுகின்றனர் (அட்டவணை-1).

| ஆட்சிப்பகுதி | முதிர் ஹரப்ப காலத்திற்குப் பின்னிருந்த பண்பாடு |
|---|---|
| சிந்தி | ஜூகர் |
| சோலிஸ்தான் | கல்லறை H |
| குல்லி | நகர நிலைக்குப் பிந்தைய காலம் |
| சோரத் | பின்னாள் சோரத் |
| கிழக்கு | நகர நிலைக்குப் பிந்தைய காலம் |
| வட கிழக்கு | நகர நிலைக்குப் பிந்தைய காலம் |
| ஹரப்பா | கல்லறை H |

***அட்டவணை-1:*** முதிர் ஹரப்ப காலத்திற்குப் பின்னிருந்த பண்பாடுகள் (நன்றி: பொஷல்)

முதிர் ஹரப்பக் காலத்திற்கு முன்பு இருந்திராத குடியிருப்புகளிலும் (எ.கா. நௌஷரோ) சிந்து வெளிப்பண்பாட்டின் வீழ்ச்சிக்குப் பிறகு வாழ்க்கை நிலை நகர நிலைக்கு முந்தைய கால நிலையை அடைந்தது எனக் கண்டறியப்பட்டுள்ளது. சிந்து வெளியின் ஆட்சிப் பகுதிகள் ஏன் ஒருமித்த பண்பாட்டுக்கூறுகளை முதிர் ஹரப்பக்காலத்தில் தழுவி ஏற்றன என்பதும், பின்னர் அவற்றை முழுவதுமாய்த் துறந்தன என்பதும் இதுவரை அவிழ்க்கப்படாத பெரும் புதிர்.

### சிந்து வெளி எழுத்துக்களில் வட்டார வேறுபாடுகள்

சிந்து வெளி எழுத்துக்களை ஆய்ந்து பார்க்கும் போது முதிர் ஹரப்பக் காலத்திலேயே இவ்வெழுத்துக்களின் பயன்பாட்டில் வட்டார வேறுபாடுகள் இருப்பது தெரியவருகிறது. இத்தகைய ஆய்வுகளை நடத்த சிந்துவெளி சொல்தொடரகராதிகள் (Indus concordance) இன்றியமையாத கருவிகளாகும். இவற்றில் குறிப்பாக மகாதேவனின் சொல்தொடரகராதி ஒரு செல்வக்குவியல் என்றே கூறலாம். மகாதேவன் சொல்தொடரகராதி, மற்றும் அதனுடன் பதிப்பிக்கப்பட்டுள்ள அட்டவணைகளை அடிப்படையாகக் கொண்டு வெளியிடப்பட்டுள்ள ஆராய்ச்சிக் கட்டுரைகள் சிந்துவெளி எழுத்துக்களின் வட்டார வேறுபாடுகளை அறிய உதவுகின்றன.

சிந்து வெளி எழுத்துக்கள் வலமிருந்து இடமாக எழுதப்பட்டன என்பது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கருத்து. எனினும், இடமிருந்து வலமாக எழுதப்பட்ட இலச்சினைகளும் முத்திரைகளும் கிடைத்துள்ளன. இவை பொதுவாக எல்லா இடங்களிலும் கிடைத்திருந்தாலும், அதிக அளவில் கிடைத்திருப்பது ஹரப்பாவிலும், கிழக்கு ஆட்சிப்பகுதியில் உள்ள காலிபங்காவிலும் தான்; மிகக் குறைந்த அளவில் கிடைத்திருப்பது மொஹெஞ்ஜோதாரோவில்தான் (அட்டவணை-2) இதுபோன்றே, களக்குறியீடுகளை (field symbols) ஆய்வு செய்யும் போது, யானை உருவம் லோதலில் அதிகமாகக் கிடைத்துள்ளதைப் பார்க்கிறோம். ஆற்று முதலை (விடங்கர்- Gharial) களக்குறியீடு ஹரப்பாவில் அதிகமாகவும், வேங்கை மரக்குறியீடு (Kino tree)

| சிந்துவெளியிடம் | எழுதும் திசை | எழுதும் திசை | எழுதும் திசை | எழுதும் திசை | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| | வலமிருந்து இடமாக | இடமிருந்து வலமாக | மேலிருந்து கீழாக | மற்றவை | |
| மொஹஞ்ஜோதாரோ | 1533 | 48 | 4 | 145 | 1730 |
| ஹரப்பா | 1076 | 148 | 1 | 157 | 1382 |
| சான்ஹு தாரோ | 70 | 6 | 0 | 10 | 86 |
| லோதல் | 169 | 15 | 0 | 14 | 198 |
| காலிபங்கா | 87 | 10 | 2 | 20 | 119 |
| மற்றவை | 26 | 5 | 0 | 9 | 40 |
| மேற்கு ஆசியா | 13 | 3 | 0 | 2 | 18 |
| மொத்தம | 2974 | 235 | 7 | 357 | 3573 |

அட்டவணை 2: சிந்துவெளியிடங்களும் அவற்றின் எழுத்து திசைப்பரவலும் (மகாதேவன் சொல்தொடரகராதியிலிருந்து)

ஹரப்பாவில் மட்டுமே கிடைப்பதையும் அறிகிறோம். குறியீடுகளின் பயன்பாட்டிலும் வட்டார வேறுபாடுகள் உள்ளன. எடுத்துக்காட்டாக  குறியீடுகள் ஹரப்பாவில் அதிகம் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. எழுதப்பட்ட செப்பு வில்லைகள் மொஹெஞ்ஜோதாரோவில் மட்டுமே கிடைத்துள்ளன.

சமீபத்தில் வந்த ஒரு ஆராய்ச்சிக் கட்டுரையில் சிந்துவெளி ஆராய்ச்சியாளர் மார்ட்டா அமேரி சிந்துவெளி இலச்சினைகளின் சிற்பவியலில் (Iconography) வட்டார வேறுபாடுகள் இருப்பதைச் சுட்டிக்காட்டுகிறார்.

மொஹெஞ்ஜோதாரோ மற்றும் ஹரப்பா நகரங்களைக் காட்டிலும், லோதலில் ஒற்றைக்கொம்பன் (unicorn) களக்குறியீடுகள் அதிக அளவில் இருப்பதாகவும், இதற்கு மாறாக, காலிபங்காவிலும் பனவாலியிலும் ஒற்றைக்கொம்பன் களக்குறியீடுகள் குறைந்த அளவில் இருப்பதாகவும் இவர் சுட்டிக்காட்டுகிறார். மேலும், தொன்மவியல் தழுவிய காட்சிகள் அமைந்த சிந்துவெளிக் குறியீடுகள் பொறிக்கப்பட்ட பொருட்கள் அதிக அளவில் காலிபங்காவில்தான் கிடைத்துள்ளதாகவும், இத்தகையப் பொருட்கள் இதுவரை லோதலில் கிடைக்கவில்லை என்றும் கூறுகிறார். இவற்றை அடிப்படையாகக் கொண்டு மார்ட்டா அமேரி, காலிபங்கா மற்றும் பனவாலியின் மேல் தட்டு மக்கள், இன, பொருளாதார, சமுதாய அடிப்படையில் இதர ஹரப்ப மக்களினின்று வேறுபட்டவர்கள் எனக் கருதுகிறார்.

சிந்துவெளி சொல்தொடரகராதிகள் உதவியுடன், சிந்து எழுத்துக்கள் மற்றும் அவற்றின் சூழல்சார் (textual and contextual analysis) ஆய்வு சிந்துவெளிப் பண்பாட்டின் பரிணாமம் மற்றும் அங்கு வாழ்ந்த மக்களது மொழி, இனம் மற்றும் சமுதாய அமைப்பு பற்றி அறிய உதவி வருகின்றன. இவற்றின் மூலம் சிந்து வெளிப்பகுதி பன்மொழி/பல்மண்டல/ பல பண்பாட்டுப் பகுதியாக இருந்ததென்ற கோட்பாடு அறிஞர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டு வருகிறது. வரும் நாட்களில் இத்தகைய ஆராய்ச்சி சிந்துவெளி மொழியைப் படித்தறியவும் உதவும் என்பதில் ஐயமில்லை.

இக்கட்டுரை எழுத உதவிய நூல்கள் மற்றும் கட்டுரைகள்:

1. Possehl, Gregory L., and Mukundrai H. Raval. 1989. Harappan civilization and Rojdi. New Delhi [u.a.]: Oxford & IBH Publ. Co.

2. Possehl, Gregory L. 2004. The Indus civilization: a contemporary perspective. New Delhi: Vistaar Publ.

3. Possehl, Gregory L. 1997. The Transformation of the Indus Civilization. Journal of World History, Vol 11, No. 4, pp 425-472

4. Mahadevan, Iravatham. 1977. The Indus script: texts, concordance, and tables. New Delhi: Archaeological Survey of India.

5. Mythili R. Rao and Iravatham Mahadevan. 1985. Archaeological Context of Indus Texts at Mohenjodaro, pp 25-40

6. Ganesan Sundar, et al. 2009. Indus Script Text and Context A Statistical-Positional Analysis of Significan Text Segments. Bulletin of the Indus Research Centre, No.1. Roja Muthiah Research Library

7. Marta Ameri. 2013. Regional Diversity in the Harappan World: The Evidence of Seals. In Connections and Complexity: New Approaches to the Archaeology of South Asia. pp 355-374

8. Technical Glossary of Terms in Tamil for Indus and Related Fields of Research, Indus Research Centre, Roja Muthiah Research Library (Work in progress) ■

ஆசிரியர் குழு

சு. தியடோர் பாஸ்கரன்

வ. கீதா

அ. சதீஷ்

க. சுந்தர்

# நிகழ்வுகள்

## சொற்பொழிவு





10 அக்டோபர் 2013 - Labour Migrations: Past and Present - Issues and Challenges என்ற தலைப்பில் ***பேரா. பெர்னார்ட் டி சாமி*** அவர்கள் சொற்பொழிவாற்றினார்.

13 டிசம்பர் 2013 - **திருமண அழைப்பிதழ்கள்- அறிமுகமும் அனுபவமும்** என்ற தலைப்பில் ***பேரா. பெருமாள் முருகன்*** அவர்கள் சொற்பொழிவாற்றினார்.

20 டிசம்பர் 2013 - Bibliotheca Malabarica: Ziegenbalg's Tamil Library என்ற தலைப்பில் ***பேரா. வில் சுவீட்மேன், முனைவர். R. இலக்குவன்*** இணைந்து சொற்பொழிவாற்றினார்கள்.

## ஆவணத்திரைப்படம் வெளியீடு

13 நவம்பர் 2013 - திரு. கோம்பை S அன்வர் அவர்கள் இயக்கிய “யாதும்“ ஆவணத் திரைப்படம் வெளியிடப்பட்டது. இவ்விழாவில் இந்த ஆவணத்திரைப்படம் திரையிடப்பட்டது.

## வரவு

### *நன்கொடை*

திரு. P. R. வாசுதேவன் அவர்கள் நூலகத்திற்கு நிதியுதவி அளித்துள்ளார். அவர்களுக்கு ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

### *புத்தகங்கள்*

திருமதி. கனகாம்பாள், திரு. ஆறு. அண்ணல், திரு. S. முத்தையா, திரு. சோமு மதிவாணன், திரு. V. R. கருப்பன் செட்டி, திருமதி. ஜெயந்தி மோகன், திருமதி. ஜெயலக்ஷ்மி, திரு. M. S. சாமிநாதன் ஆகியோர் நூலகத்திற்கு புத்தகங்களையும் பத்திரிகைகளையும் நன்கொடையாக அளித்துள்ளனர். அவர்களுக்கு ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகம் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

## புத்தகம் கட்டுதல்

அச்சடிக்கப்பட்ட காகிதப் பாரங்களை இணைத்து புத்தகம் உருவாக்கும் முறையை நாம் புத்தகம் கட்டுதல் (Book Binding) என்கிறோம். புத்தகம் கட்டுதலில் காகிதப் பாரங்களை ஒன்றாக இணைத்துக் கட்டுவதற்கு பரவலாக இரண்டு தையல் முறைகள் பின்பற்றப்படுகிறது. ஒன்று, அடுக்கிய பாரங்களின் இடதுகை பக்கவாட்டு ஓரத்தின் பகுதியில் குத்தூசியினால் குத்தித் துவாரம் செய்து, அந்தத் துவாரத்தின் ஊடே நூலை செலுத்தி கட்டும் முறை. இதை குத்துத் தையல் என்பார்கள். இந்த முறையில் தைக்கப்படும் புத்தகத்தின் நடுப்பகுதியை அகல விரித்து முழுவதுமாகப் படிக்க இயலாமல் போய்விடும். மேலும், இந்தத் தையல் முறையால் காகிதங்கள் விரைவில் கிழிந்து போக நேரிடும். பெரும்பான்மையான நூல்கள் பழமையான பின்னர் இந்தக் குத்துத் தையல் மூலம் தான் கட்டப்படுகிறது. இதைத் தவிர்ப்பது நல்லது. மற்றொரு முறை செக்ஷன் தையல். இதுவே புத்தகப் பாதுகாப்பிற்கு குத்துத் தையல் முறையைவிட சிறந்த முறை. இந்த முறையில், ஒவ்வொரு மடிக்கப்பட்ட பாரங்களின் முதுகுப் பகுதியிலும் தையல் நூலை கொண்டு ஊடுறுவிக் கட்டப்பட்டு, பின் அனைத்து பாரங்களின் முதுகுச் சரடுகளும் ஒன்றாக இணைத்துத் தைக்கப்படுகிறது. இந்தத் தையல் முறையால் படிப்பவர்கள் பக்கங்களை முழுவதுமாக எந்தச் சிரமமும் இன்றி படிக்க இயலும், புத்தகமும் நீண்ட நாள் பாதுகாப்பாக இருக்கும்.

# ஐரோப்பாவில் தமிழ் ஆவணங்கள்

**சுந்தர் கணேசன், ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகம்**

பழமையான ஆவணங்களான ஓலைச்சுவடிகள் நமது வரலாற்றையும் பண்பாட்டையும் வெளிக்கொணரும் தரவுகளாக உள்ளன. நமது நாட்டில் எழுதப்பட்ட ஓலைச்சுவடிகள் இந்தியாவிலும் உலகத்தின் பல்வேறு இடங்களிலும் பாதுகாக்கப்படுகின்றன. இது தொடர்பாக ஜெர்மனி ஹாலேயிலுள்ள ப்ராங்கே பவுண்டேஷன்ஸ் *Palm-leaf Manuscripts in Europe and India* என்ற மூன்று நாள் பட்டறையை கடந்த ஆண்டு நவம்பரில் ஏற்பாடு செய்திருந்தது. அப்பட்டறையில் கலந்து கொள்வதற்காக பல நாடுகளில் இருந்து ஆய்வாளர்கள் ஹாலே வந்திருந்தனர்.

இந்தப் பட்டறையில் தென்னிந்தியாவில் உள்ள ஓலைச்சுவடிகள் பற்றிய எனது கட்டுரையை வாசித்தேன். தென்னிந்தியாவில் எந்தெந்த நிறுவனங்களில் எவ்வளவு ஓலைச்சுவடிகள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன, அவைகளைப் பாதுகாக்க இந்திய அரசாங்கத்திடமிருந்தும், வெளிநாட்டு நிதி நிறுவனங்களிடமிருந்தும் கிடைக்கப்பெற்ற நிதியுதவி, இந்தியாவில் ஓலைச்சுவடிகளைப் பட்டியலிட நடந்துவரும் முயற்சிகள், அதிலுள்ள சிக்கல்கள் குறித்து நான் திரட்டியத் தகவல்களைப் பகிர்ந்து கொண்டேன்.

பேரா. வில் சுவீட்மேன் அவர்கள் டேனிஷ் மிஷனரியான சீகன்பால்கு தரங்கம்பாடியில் வைத்திருந்த தமிழ்த் தொகுப்பைப் பற்றி பேசினார். இந்தத் தொகுப்பில் குறிப்பிட்டுள்ள அனைத்து ஓலைச்சுவடிகளும் அழிந்துவிட்டன. அத் தொகுப்பின் பட்டியல் மட்டுமே நம்மிடம் உள்ளது. இப்பட்டியலை *Bibliothica Malabarica* என்ற நூலாக பேரா. வில் சுவீட்மேன் வெளியிட்டுள்ளார். (இதைப் பற்றி கடந்த மாதம் வில் சுவீட்மேன் முனைவர் R. இலக்குவனுடன் இணைந்து ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகத்தில் சொற்பொழிவு நிகழ்த்தினார்.) டென்மார்க்கில் ஓலைச்சுவடிகளுடன் பாதுகாக்கப்பட்டு வரும் தஞ்சை அரசர் ரகுநாத நாயக்கர் தங்க ஓலையில் எழுதிக் கொடுத்த பட்டயத்தின் வரலாற்றைப் பற்றி முனைவர். பி. எஸ் ராமானுஜம் அவர்கள் பேசினார்.

தொடர்ந்து ஓலைச்சுவடிகள் பாதுகாப்பு, ஐரோப்பாவில் உள்ள டானிஷ் இங்கிலிஷ்-ஹாலே மிஷன்ஸ் ஓலைச்சுவடிகளின் முக்கிய சிறப்புகள், பிரான்ஸ், இங்கிலாந்தில் உள்ள ஓலைச்சுவடிகளின் தொகுப்பு, பிராங்கே பவுண்டேஷனில் பாதுகாக்கப்படும் ஓலைச்சுவடிகள், ஓலைச்சுவடிகளை மின்னணுவாக்கம் செய்தல் போன்ற பல்வேறு தலைப்புகளில் கட்டுரைகள் வாசிக்கப்பட்டன.

பட்டறையின் பகுதியாக பிராங்கே பவுண்டேஷனில் உள்ள ஆவணங்களும் காட்சிப்பொருட்களும் காண்பிக்கப்பட்டன. இதன்மூலம் பிராங்கே பவுண்டேஷனிலுள்ள ஓலைச்சுவடிகளைப் பார்வையிட வாய்ப்பு கிடைத்தது. இங்கு பக்தி இலக்கியம், ஜோதிடம், கணிதம், வீட்டுப் பத்திரங்கள், அரிச்சுவடி என பல சுவடிகள் உள்ளன. இவற்றில் பக்தி இலக்கியம் சார்ந்த ஓலைச்சுவடிகளே பெரும்பாலானவையாகும். இதைத் தவிர கலோன் நகரிலும் பல ஓலைச்சுவடிகள் உள்ளன. பதினெட்டாம், பத்தொன்பதாம் நூற்றாண்டில் எழுத்தப்பட்ட இந்த ஓலைச்சுவடிகள் பெரும்பகுதி காரைக்குடியைச் சுற்றியுள்ள பகுதிகளில் இருந்து சேகரிக்கப்பட்டவையாகும். (இதுபோன்ற ஓலைச்சுவடிகள் சில ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகத்திலும் உள்ளன). இவை அக்காலத்தின் சமூக - பொருளாதார வரலாற்றை கட்டமைக்க மிகவும் பயனுள்ளதாக இருக்கும். டென்மார்க்கிலும் இதுபோன்ற ஓலைச் சுவடிகள் நிறைய உள்ளன. இவற்றைப் பார்வையிட ஆராய்ச்சியாளர்கள் முன் வரவேண்டும்.

பிராங்கே பவுண்டேஷனிலுள்ள தமிழ் ஆவணங்களைப் பாதுகாக்கவும், அவைகளை ஆராய வழிவகை செய்யவும் பிராங்கே பவுண்டேஷனுடன் ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகம் செய்து கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி நூலக தொகுப்புகளை ஆராய்வது, கருத்தரங்குகள் நடத்துவது, இதழ்களை அட்டவணைப்படுத்துவது, கண்காட்சிகள் நடத்துவது, நூலக முன்னேற்றத்திற்கான முயற்சிகளில் ஈடுபடுவது, நூல்களைப் பரிமாற்றம் செய்து கொள்வது என இரு நிறுவனங்களும் முடிவு செய்துள்ளன.■

---

ரோஜாஇதழ்

Book Post

**ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகம்**
3வது குறுக்குச் சாலை
மையத் தொழில் நுட்பப் பயிலக வளாகம்
தரமணி, சென்னை 600 113
தொலைபேசி : 22542551 / 52
மின்னஞ்சல் : admin@rmrl.in
www.rmrl.in

*Published by G. Sundar on behalf of the Roja Muthiah Research Library, 3rd cross road, Central Polytechnic Campus, Taramani, Chennai 600113*
*Printed by Rm. Subbiah, Asian Printers, 25, Peters road, Chennai 600014. Editor: G. Sundar*